Press Release No: 489

Date: 27/6/08

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை மாவட்ட உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் 24.06.2008 அன்று சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூட்டம் ஆணையாளர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவர், திரு. க. ராஜாராமன், இஆப அவர்களால் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் உணவு பொருள் வழங்கல் துறையின் இணைஆணையாளர் திரு.சுந்தரமூர்த்தி, இஆப, துணைஆணையாளர் (சென்னை) வடக்கு திரு.சண்முகநாதன், திருமதி.கங்காபாய், துணைஆணையாளர் (சென்னை) தெற்கு ஆகியோர் பங்கேற்றதோடு நுகர்வோர் சேவையில் முன்னோடியாகத் திகழும் சென்னை மாவட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர் மற்றும் நுகர்வோர் சேவை தொடர்புடைய அரசுத் துறை / துறை நிறுவனங்களாகிய போக்குவரத்து துறை, சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்து கழகம், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை, மருத்துவம் மற்றும் ஊரக பணிகள் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத் துறை, தொழிலாளர் மற்றும் எடை அளவு கட்டுப்பாட்டுத்துறை, காவல்துறை, தென்னக ரயில்வே, இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் ஆகியவற்றின் பிரதிநிதிகள் / அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நுகர்வோர் சந்திக்கும் பல்வேறான அத்தியாவசிய புகார்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டதோடு கீழ்க்கண்ட முக்கிய பிரச்சனைகள் மீது துரித நடவடிக்கை எடுத்திட சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவரும் , உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அ) சென்னை நகரிலுள்ள தெருவோர உணவகங்கள் பல சுகாதாரமற்ற உணவுகளை வழங்குவதால் அவைகளை முறைபடுத்த மாநகராட்சி மற்றும் பொது சுகாதாரதுறை மண்டல வாரியாக உணவு மற்றும் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம்களை நடத்தி அவைகள் அளிக்கும் உணவின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க இத்துறைகள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

ஆ) வெளிநாடுகளிலிருந்து பல்வேறு மிட்டாய்கள் போன்ற உணவு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டு உள்நாட்டு கடைகளில் விற்கப்படுகிறது. இத்தகைய பொருட்கள் பொட்டலங்களில் ஆங்கிலத்தில் இறக்குமதி செய்யும் இந்திய இறக்குமதியாளர் முகவரி, எடையளவு, உற்பத்தி / காலாவதி தேதி போன்ற விவரங்கள் தெளிவாக எழுதப்பட்டிருக்க

வேண்டும். சட்ட முறை அளவீட்டு துறை அலுவலர்கள் சட்டவிரோதமாக விற்கப்படும் இறக்குமதி உணவு பண்டங்கள் மீதும் இது போன்று பொட்டலங்கள் மீது உரிய விவரங்கள் இல்லாத உள்நாட்டு உணவு பொருடகள் விற்பவர்கள் / உற்பத்தி செய்வோர் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இ) நச்சுத் தன்மையுடைய பொருட்களால் தயார் செய்யப்பட்ட குழந்தைகளுக்கான பொம்மைகள் விற்பது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986ன்படி தண்டனைக்குரியது. சந்தையில் இவ்வாறு விற்கப்படும் பொம்மைகளின் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பவும் நச்சுத்தன்மையுடை பொம்மைகள் விற்கும் நபர்கள் / உற்பத்தியதாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

ஈ) அனைத்து எரிவாயு முகவர்களும் வாடிக்கையாளர்களுக்கு எரிவாயு உருளைகள் அனுப்பும்போது உருளைகளின் எடை சரிபார்க்க ஏதுவாக வழங்கல் ஊழியர்களிடம் (Delivery Boys) கண்டிப்பாக வில்தராசு (Spring Balance) இருத்தல் வேண்டும் என எண்ணெய் நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கென பிரத்யேகமாக இயங்கி வரும் இணையதளமாகிய www.consumer.tn.gov.in னை நுகர்வோர் அனைவரும் அறியும் வண்ணம் செய்வதுடன், அதில் நுகர்வோர் தம் புகார்களை நேரடியாக பதிவு செய்யும் வசதியும் (Online Consumer complaint facility)ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதனை கூட்டத்தின் தலைவர் (ம) உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையர் எடுத்துரைத்ததோடு, நுகர்வோர் தம் புகார்களை consumer@tn.nic.in என்ற முகவரிக்கும் மின்அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கலாம் என தெரிவித்தார். கூட்டத்திற்கு வருகைபுரிந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பினருக்கும், அரசு துறை/ நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவர் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

ஒம்/-க.ராஜாராமன்
ஆணையாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை

ஆணையாளருக்காக

2/2